II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**LAOP.No. 127/2004**

Deposition of witness for the Claimant /CW2
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 24.03.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Periyasamy | Age | : | |
| Father's / Husband's Name | : | Ramachandran | Taluk | : | |
| Village | : | | | | |

முதல் விசாரணை=

என்னுடைய பெயர் பெரியசாமி. நான் கோருனர் தரப்பு சாட்சியாவேன். நான் இன்ஸ்ட்டியுசன் ஆப் இன்ஜீனியர் அமைப்பின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பொறியாளர் ஆவேன். மேலும் இந்திய செல்வ வரி சட்டப்பிரிவு 34 A, B -ன் கீழாக பதிவு செய்யப்பட்ட அசையா சொத்துக்களுக்கான மதிப்பீட்டாளர் ஆவேன். என்னுடைய பிரமாணப் பத்திரத்தினை இன்று தாக்கல் செய்கின்றேன். அதனை எனது முதல் விசாரணைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானவை. பிரமாணப்பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கோருனர் தரப்பு ஆவணங்களாக கீழே கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

1. 26.02.2002 தேதியிட்ட எனது பெயரில் உள்ள லைசன்ஸின் ஜெராக்ஸ் நகல் கோ.த.சா.ஆ.16.
2. 23.01.2025 தேதியிட்ட மதிப்பீட்டு அறிக்கை கோ.த.சா.ஆ.17.
3. 28.02.2025 தேதியிட்ட மதிப்பீட்டு அறிக்கை கோ.த.சா.ஆ.18.

(அறிவார்ந்த அரசு தரப்பு வழக்கறிஞர் கோ.த.சா.ஆ.16, 17, 18 ஆவணங்கள் நிலம் கையகப்படுத்தப்பட்ட காலத்திற்குறிய தொடர்புடைய ஆவணங்கள் இல்லை என்று ஆட்சேபித்தார். அரசு தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்குட்பட்டு

குறியீடு செய்யப்பட்டது)

(அறிவார்ந்த அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகின்றது)